1969 மார்ச் 14]

அன்று ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர்கள் மின்சக்தி வழங்கப்படுவதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதற்குட்பட்டு, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்கள் அவற்றின் முறைவைப்புப்படி வேலை மேற்கொள்ளப்படும்.

திரு டி. மார்டின் : சாத்தான்குளம் தொகுதி சௌக்கியாபுரத்தில் உள்ள விவசாயிகள் மின் இணைப்புக் கேட்கும்போது அதற்கு அருகாமையில் அதைச் சேர்ந்த கிராமங்களான கீழ் நடுவக்குறிச்சி, மேல் நடுவக்குறிச்சி, விஜயராகவபுரம் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் பம்ப் செட்களுக்கான கரன்ட் சப்ளைக்கு மனு போட்டு அவைகளும் இதோடு சேர்த்துப் பரிசீலிக்கப்பட்டதா ? அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : என் விடையிலேயே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தையும் சேர்த்துத்தான் கணக்கிடப்பட்டிருக்கிறது. வேறு கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்ததாகச் செய்திக்குறிப்பு எதுவும் இல்லை.

திரு அ. லெ. சுப்பிரமணியம் : பொதுவாக திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1962-63ல் இருந்து அவர்கள் மனுச் செய்தும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகப் புகார் இருக்கிறது. சாத்தான் குளம் சப் தாலுகாவில் கருங்கடல் கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட 30 கிணறுகளுக்கு வேண்டி மனுச் செய்யப்பட்டும் இன்னும் லைன்கள் போடப் படாமல் இருக்கின்றன. இதை நான் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் மின் இணைப்புக் கொடுப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டை டெவலப்மென்ட் கவுன்ஸிலிலும் கூறியிருக்கிறோம். ஆகவே இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் தவறு. சென்ற இரண்டு ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 50,000-க்கு மேற்பட்ட பம்ப் செட்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சித்தன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்னை பற்றிய அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்கத் தவறியமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சித்தன் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது— முற்பகல் 10.00

That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the Government to bring down the prices in hotels which has caused great deal of hardship to the public

என்ற கருத்துக்ககாகக் கொடுத்திருக்கிறார்கள். விலையேற்றம் என்பது திடீரென்று ஏற்பட்டுவிடக்கூடியது அல்ல. ஆகவே, இது இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(அ) எண்ணூரில் மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டத்தினால் பீதியடைந்துள்ள மலையாளிகள் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

எண்ணூர் பிரதேசத்தில் "மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டம்" என்று போட்டு பலர் வெறித்தனமாகப் பேசியுள்ள போக்கைப் பற்றியும் அதனால் பீதி அடைந்துள்ள மலையாளிகளின் நிலைமையைப்பற்றியும் விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்பொருள் குறித்து விரிவான விளக்கம் தந்திருக்கின்ற காரணத்தினால் நான் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

THIRU A. A. SUBBA RAJA: Sir, on a point of information.

MR. SPEAKER: No point of information now.

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) வினா நேரம் முடிந்தவுடன் தகவல் கோருவதற்கு உறுப்பினர்களுடைய உரிமை

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. In any Parliament or Legislature as soon as the question-hour is over—it is known as the zero hour—and before the regular agenda for the day is taken up, if any hon. Member is handicapped for want of information, information may be asked—it is also in the interest of the Government—and also to enlighten the House information may be asked. It is also the practice even in the Parliament for any hon. Member to raise a point of information. Of course, after finding out whether the point raised is relevant or not, the Chair can reject it or not. But it is the privilege of any hon. Member to ask for any information on the face of the Earth and under the Sun.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு விநாயகம் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை என்பது, நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல், நமது சட்டமன்ற விதிமுறைகளிலிருந்து மாறாக ஏதாவது நடந்தால் அப்பொழுது வரும். திரு விநாயகம் அவர்கள் சொல்லுகின்ற "ஸீரோ ஹவர்" நமது விதிமுறைகளில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.